# A WORD OF ADVICE

If You are ever in need of
Pure Musk, Saffron, Shilajit,
Hing, Pearls &
Himalayan Drugs etc., etc.,

Never make Experiments with
Un-Known and
Un-Reliable Firms

*Have your requirments from :—*

## KALIA BROTHERS (Regd.)

JULLUNDUR CITY—N. INDIA

※

# ஓர் ஆலோசனை

எப்போதும் சுத்தமான கஸ்தூரி,
குங்குமப்பூ, சிலாஜித், பெருங்
காயம், முத்து, ஹிமாலய
மூலிகைகள் முதலியன
உங்களுக்குத் தேவையானல்—

முன் பின்னறியாததும்
நம்பிக்கையில்லாததுமான
ஸ்தாபனங்களோடு
ஒருபோதும் பரிக்ஷை செய்ய
வேண்டா.

※

*உங்கள் தேவைகளைப் பெறுவதற்குத் தக்க இடம்:*

## கலியா பிரதர்ஸ் (ரிஜிஸ்டர்ட்)

ஜலந்தர் ஸிடி—(வட இந்தியா)

Grams : AMRUTHAM P. B. 82 Phone : 2208

# The Arya Vaidya Pharmacy (Coimbatore) Limited.

## H. O. : Trichy Road, Coimbatore-1

**THE IDEAL HOUSE FOR**

genuine Ayurvedic Medicines & Treatments

NEW DELHI BRANCH:
23-B, Pusa Road, Karol Bagh,
NEW DELHI — 5 (Phone 55687)

**OTHER OFFICES:**

Madras (Phone 85752), Cannanore (Phone 92), Palghat (Phone 195), Kozhikode (Phone 984), Ernakulam (Phone 494) Ponani (Phone 41), Alatur, Kanjikode & Coimbatore (Opp. Rly. Jn.)

**FACTORY:** KANJIKODE (S. Rly)

**NURSING HOME:** RAMANATHAPURAM, COIMBATORE (Phone 2194)

Qualified & experienced Physicians available at all Branches. Letters from patients personally attended to by the Chief Physician and prescriptions and medicines sent. Special Treatments, including "Pancha Karma" successfully carried out at Coimbatore and at Branches in Ernakulam and Ponani.

Price list in English, Hindi, Tamil & Malayalam sent free on application.

For further details, kindly contact :—

*Arya Vaidyan* P. V. RAMA VARIER
Chief Physician & Managing Agent.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்,

(ஸ்தாபிதம் 1939) Phone No. 660

ரஸசாலை:
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி 1.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:
31, சின்னக்கடைத் தெரு.
திருச்சிராப்பள்ளி 2.

வைத்யர்களுக்குத்தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்த்ரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள் மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன,

*வைத்யர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லரையாகவும், மருந்துகள் கிடைக்கும்.*

## எமது விசேஷ மருந்துகள்

**சந்திரிகாவலேஹம்.**

மூலம். எமது விசிஷ்டயோகஸங்கிரஹம். யாதவஜீயின் ஸித்த யோக ஸங்கிரஹம்.

ஸர்பகந்தா வம்சலோசனம் சதாவரீரஸம் சங்கபுஷ்பீரஸம் விதாரீரஸம் இவைகளை முக்யமாகக் கொண்ட புத்திப்பிர ஸாதன ரஸாயனம்.

புத்தியைத்தெளிவு படுத்தி உணர்ச்சிகளின் கடும் வேகத்தைக் குறைத்து மனதிற்கு சாந்தி அளிக்க வல்லது தூக்கமின்மை, புத்திப்பிரமம், கட்டுக்கடங்காத உணர்ச்சிக் கொந்தளிப்பு, தலைசுற்றல், மயக்கம், கைகால்களில் எரிச்சல் ரத்தக்கொதிப்பின் பல் வேறு நிலைகளில் பித்தரத்ததுஷ்டியால் ஏற்படும் உபத்திரவங்கள். இவைகளில் நம்பிக்கையுடன் கையாளக்கூடியது.

*விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்.*

A. ராகவராவ், *மானேஜிங் டைரெக்டர்*

# லக்ஷ்மி டிஸ்பென்ஸரி

**கீழ் ராஜவீதி, — புதுக்கோட்டை.**

கிளை — பொன்னமராவதி.

★

மிகப் பிரபல ஆயுர்வேத வைத்யரும்
குழந்தை வைத்ய நிபுணருமான
ஆயுர்வேத சிரோமணி, வைத்ய விசாரத

## ஸ்ரீ. P. விச்வனாத சர்மா

அவர்களின்
மேற்பார்வையில் நடைபெறும்

**மிகச் சிறந்த ஆயுர்வேத ஔஷத சாலை.**

எல்லா வியாதிகளுக்கும்
விசேஷமாக சிசு நோய்களுக்கும்
ஆயுர்வேத முறைப்படி
*சிறந்த சிகித்ஸை அளிக்கப்படுகிறது*

★

**எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.**

N. வைத்யனாதன்.
உதவி வைத்யர்.

P. விச்வனாத சர்மா
பிரதான வைத்யர்.



# வைத்ய சந்த்ரிகை


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 23 | பிலவ – ஆவணி, புரட்டாசி | பகுதி 9 |
| Vol. 23 | SEPTEMBER 1961 | No. 9 |


आयुरागमरहस्यबोधिनी दीर्घजीवितविशेषदायिनी ।
द्राविडीयपृथुमण्डलादियं शश्वदुद्भवति वैद्यचन्द्रिका ॥

## மூன்றாவது திட்டத்தில் ஆயுர்வேதம்.
## ஓர் முன்னேற்றம்

மூன்றாவது திட்டத்தில் ஆயுர்வேத அபிவிருத்திக்கான யோசனைகளை வெளியிடும் வகையில் திட்டக் குழுவினர் ஆயுர் வேதத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது கவனிக்கத் தக்கதாகும் கடந்த பத்தாண்டுகளில் அதாவது முதல் இரண்டு திட்டங்கள் காலத்தில் ஆயுர்வேதத்தில் அரசாங்கம் கொண்டுள்ள ஈடுபாடு கிரமமாக அபிவிருத்தியடைந்து வருகிறதெனலாம். முதல் திட்டத்தில் ஆயுர்வேதம் முதலிய நாட்டு வைத்ய முறைகளின் அபிவிருத்திக்காக 38 லக்ஷ ரூபாய்கள் செலவிடப்பட்டது. ஆராய்ச்சித் துறையில் மேலும் அபிவிருத்தி ஏற்படும் வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய்கள் செலவிடப்படுகின்றன. 1959-வது ஆண்டில் மத்திய அரசாங்கம் மத்திய ஆயுர்வேத ஆராய்ச்சிக் குழுவொன்றை ஏற்படுத்தியது. இது ஆயுர்வேத ஆராய்ச்சி வழிகளில் தேசமெங்கும் ஒரே சீரான

முறையைக் கடைபிடிக்கவும் ஆராய்ச்சியை ஊக்குவிக்கவும் யோசனைகளைக் கூறி வருகிறது. 1953-ல் ஜாம்நகரில் ஆரம்பிக்கப் பட்ட மத்ய ஆராய்ச்சி கேந்திரம் சில குறிப்பிட்ட வியாதிகளுக் கான சிகித்ஸை முறை ஆராய்ச்சியிலும் மருந்துச் சரக்குகளை இது இன்னதென்று நிர்ணயிப்பதிலும் ஈடுபட்டுள்ளது. 1956-ல் இந்த கேந்திரத்தில் மேற்படிப்புக்கான (போஸ்ட் கிராஜுவேட்) திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆயுர்வேதத்தைப்பற்றி திட்டக்குழுவினர் கொடுத்துள்ள குறிப்பு பின் வருமாறு :—

தற்போது உள்ள ஆயுர்வேதக் கல்வி முறை திருப்தி அளிப்பதாக இல்லை. மற்றும் வாதவிவாதங்களுக்குட்பட்டுள்ளது. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி மாணவனுக்கு ஆயுர்வேதத்தில் பூர்ணத் திறமை ஏற்பட ஸாத்யமாகும்படி ஓர் கல்வி முறை அமைப்பது அவசியமாகும். பெருவாரியான ராஜ்யங்களில் இணைப்புமுறைக் கல்லூரிகளே உள்ளன. சில ராஜ்யங்களில் அவைகளுடன் சுத்த ஆயுர்வேதக் கல்லூரிகளும் உள்ளன. ஆனால் எங்கெங்கு இணைப்புக் கல்லூரிகள் நடைபெற்று வருகின்றனவோ; அங்கெல்லாம் திறமையுள்ள ஆயுர்வேத வைத்யர்களை ஸ்ருஷ்டிப்பது என்ற லக்ஷ்யம் நிறைவேறவில்லை. தான் சில அங்கங்களில் மாத்திரம் தேர்ச்சி பெற்றுள்ள அலோபதி வைத்யத்திலேயே மாணவர்களுக்கு நாட்டம் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் இவ்விதமான இரு இணைப்புமுறைக் கல்லூரிகள் அலோபதிக் கல்லூரிகளாகவே மாற்றப்பட்டுவிட்டன என்பதும் உண்மை. சில வைத்யர்களும் தான் தேர்ச்சி பெறாத அலோபதி மருந்துகளையும் கையாள்வது காணப்படுகிறது.

மேலும் இக் கல்லூரிகளில் புகுவதற்கான தேர்ச்சி யோக்யதை விஷயத்திலோ, படிப்புமுறை விஷயத்திலோ, காமாபயியாஸ விஷயத்திலோ, தேர்ச்சிபெற்ற மாணவனுக்கு அளிக்கப்படும் டிப்ளமா போன்றவைகளிலோ ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்கும் இடையே ஒற்றுமை இல்லை.

மத்ய சுகாதார இலாகாவால் நிறுவப்பட்ட மத்ய ஆயுர்வேத ஆராய்ச்சிக்குழு நாட்டு வைத்யமுறைக் கல்வி திட்டத்தில் ஆயுர் வேதமும் அலோபதியும் சேர்த்தே கற்பிக்கப்படவேண்டுமென சிபார்சு செய்துள்ளது. திட்டக்குழுவினரால் நிறுவப்பட்ட ஆயுர்வேத திட்ட நிபுணாகுழு திட்டக்குழுவிற்கு அளித்த சிபார்சு பின் வருமாறு அமைந்துள்ளது.

" நான்கு வருஷங்களில் முடியக்கூடிய டிப்ளமா பாடதிட்டம்: அதில் பௌதிகம், ரஸாயனம், ஜீவ விக்ஞானம் ஆக மூன்று விக்ஞானங்களின் அடிப்படைப் பகுதிகள் புகுமுக வகுப்பிலும், பின்னர் ஆயுர்வேதத்தின் கடும்பயிற்சியும் அடங்கியிருக்க வேண்டும். இதைத்தவிர, தர்சனங்கள், பதார்த்த விக்ஞானம், ஸம்ஸ்கிருதபாஷை இவைகளில் சாரீர விக்ஞானம் திரவ்யகுணம், ரஸ சாஸ்திரம் இவைகள் கற்பிக்கப்படவேண்டும். சர்க்கார் உத்யோகத்திற்கு வாய்ப்பளிக்கக்கூடிய டிகிரி படிப்பு திட்டத்தில் மேலும் இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கவேணடும். இதில் கடைசி மூன்ருண்டுகளில் நிதானம், சிகித்ஸை, ஸ்வஸ்த விருத்தம், பிரஸூதிதந்திரம், ஸ்திரீரோகம், பாலரோகம், சல்யம், சாலாக்யம், வியவஹார ஆயுர்வேதம் முதலியவை கற்பிக்கப்பட வேண்டும். இப்பாடத்திட்டத்தில் சரகஸம்ஹிதை ஸுச்ருத ஸம்ஹிதை அஷ்டாங்கஹ்ருதயம் இவைகளில் ஏதாவதொன்று முழுமையாக சொல்லிக்கொடுக்கப்படவேண்டும். 6-வது ஆண்டு முடிந்து தேர்ந்தவனுக்கு ஆயுர்வேதாசார்ய என்ற டிகிரி அளிக்கப்படவேண்டும். இதன் கடைசி இரண்டு ஆண்டுகளில் முன்னர் படித்த ஆயுர்வேதப் பகுதிகளில் விசேஷப்பயிற்சி அளிப்பதுடன் மற்ற மருத்துவ விக்ஞானங்களிலிருந்தும் அபிவிருத்தியடைந்துள்ள அம்சங்கள் கற்பிக்கப்படும். அதனல் இதில் தேறிய மாணவன் மைனர் ஸர்ஜரி, தொத்துநோய்கள், பிரஸவம் பார்த்தல், நோய் தடுப்பு முதலிய விஷயங்களில் தேர்ச்சி பெறுவாஞதலால் தேசீய சுகாதார வேலைகளில் ஈடுபட முடியும் ".

இதற்காக கீழ்கண்ட யோசனைகளை அக்குழு வெளியிட்டுள்ளது :—

1. இந்திய வைத்திய மத்ய கவுன்ஸில் ஒன்றை அமைப்பது; அதனிடம் ஆயுர்வேதப்படிப்பு சீரமைப்பை விடுவது.

2. எல்லா ராஜ்யங்களிலும் தனித்து இந்திய வைத்திய டைரக்டர்களை நியமித்து போர்டுகளையும் அமைப்பது.
3. இந்திய வைத்ய முறைகளுக்கென தனி மருந்து கட்டுப்பாடு ஸ்தாபனத்தை நிறுவுவது.
4. ஆயுர்வேத யூனானி யோகங்களைத் தொகுப்பது.
5. ஆயுர்வேத யூனானி மருந்து உற்பத்திக்குத் தேவையான மருந்துச் சரக்குகளைப் பற்றிய கலாசாலைகளில் வநஸ்பதி விக்ஞானப் பிரிவின்கீழ் மருத்துவ குண ஆராய்ச்சிக் குழுவை நிறுவுவது.
6. ஒவ்வொரு ராஜ்யத்திலும் தனியாகவும் மத்ய நிர்வாஹத்தின் கீழ் ஒன்றாகவும் ஆங்கு ஓஷதித் தோட்டம் போடுவது.
7. பொதுப்படையாக பழக்கத்திலுள்ள பயன் தரக்கூடிய ஓஷதிகளைத் தனித்து ஆராய்வது.

ஆயுர்வேதத்தை அபிவிருத்தி செய்ய அதில் ஆராய்ச்சி மேலும் அதிகரிக்கப்படவேண்டும். ஆயுர்வேத அடிப்படைத் தத்துவங்களிலும், கிரந்தங்களிலும் சிகித்ஸை முறைகளிலும் மருந்துகளிலும் விரிவான ஆராய்ச்சி மூன்றாவது திட்ட காலத்தில் நடைபெறவேண்டும். இதற்காக 9·8 கோடி ரூபாய்கள் மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. இதன்கீழ் 5 புதிய கல்லூரிகள் ஏற்படுத்தப்படும். தற்போதுள்ள 31 கல்லூரிகள் விரிவாக்கப்படும். மருந்துகள் ஆராய்ச்சி, 1800 ஆஸ்பத்திரிகள் நடத்துதல், மருந்து உற்பத்தி சாலைகளின் அபிவிருத்தி, ஔஷதித் தோட்டம் நிறுவுதல் முதலியவை இதில் இடம் பெறும்''.

இதுவே திட்டக்குழுவினர் சிபார்சின் ஸாரம். திட்டக் குழுவினரின் சிபார்சு ஏற்கப்பட்டு ஆயுர்வேதமும் தேசீய வைத்ய ஸேவையின் தன் மதிப்புடன் ஈடுபடும் காலத்தை துரிதமாக்கச் செய்வது வைத்யர்களின் ஒத்துழைப்பைப் பொறுத்திருக்கிறது.

# திருச்சி ஆயுர்வேத சபா

## மாதாந்திர ஸம்பாஷா பரிஷத் கூட்டம்.

திருச்சி ஆயுர்வேத ஸபாவின் இவ்வருடத்தின் 6-வது ஸம்பாஷா பரிஷத் கூட்டம் 20—8—1961 ஞாயிறு மாலை 4-15 மணிக்கு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டடத்தில் நடைபெற்றது. வைத்ய விசாரத ஸ்ரீ S. V. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வஹித்தார்கள். வைத்ய விசாரத ஸ்ரீ K. S. விசுவநாத சர்மா அவர்கள் "ஆயுர்வேத சிகித்ஸையும், ஜ்யோதிஷமும்" என்பது பற்றி ஆராய்ச்சியுடன் கூடிய ஒரு உபன்யாஸம் செய்தார்கள். நவக்ரஹங்களுக்கும், த்ரிதோஷங்கள், ஸப்த தாதுக்கள், ஷட்ரஸங்கள் இவைகளுக்கும் உள்ள ஒற்றுமைகளையும், நெருங்கின ஸம்பந்தத்தையும் எடுத்து விளக்கிக் கூறி, ஜ்யோதிஷத்தை அறிவதால் சிகித்ஸைக்கு எவ்விதம் உபகாரம் அளிக்கின்றது என்பதையும் தெளிவாகக் கூறினார்கள். ஜ்யோதிஷத்தில் பல்வேறு புஸ்தகங்களில் அடங்கியுள்ள நுட்பமான விஷயங்களை நன்கு ஆராய்ந்து, ஜ்யோதிஷம் அறியாதவர்களுக்கும் எளிதில் புரியும்படியாக விஷயங்களை எடுத்துக் கூறினார்கள். தலைவர் அவர்கள் தனது முடிவுரையில், உபன்யாஸகரின் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் உள்ள ஆர்வத்தையும், அவர் உபன்யாஸம் செய்ய எடுத்துக்கொண்ட சிரத்தையையும் பாராட்டிப்பேசி, ஜ்யோதிஷத்தின் அறிவு வைத்தியர்கட்கு மிகுந்த உபகாரத்தைச் செய்கிறது என்று நிரூபித்துக் காண்பித்தார்கள்.

ஸபைத்தலைவர் வைத்ய ஸ்ரீ T. S. ஈச்வரய்யர் கூட்டத்தின் முடிவில் வந்தனோபசாரம் கூற, கூட்டம் மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

# தமிழ்நாடு ஆயுர்வேத மகா மண்டலம்

## சேலம் மாவட்டக் கிளை

6—8—61 ஞாயிற்றுக்கிழமை மாலை 3½ மணிக்கு சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டம் சேலம் தேவேந்திரபுரத்தில் திரு M ராஜாபிள்ளை வீட்டில் கூடியது. கூட்டத்திற்கு திரு எஸ். பி. சின்னத்தம்பி அவர்கள் தலைமை வகித்தார். அவர்கள் தலைமையுரையில் இன்றைய கூட்ட நிகழ்ச்சிகளை எடுத்துக்கூறியதுடன் வைத்யர்கள்

அவசியம் சித்த ஆயுர்வேத யூனானி என்ற பாகுபாடில்லாமல் நாட்டு வைத்தியம் என்ற முறையில் செயல்படவேண்டிய அவசியத்தை வற்புறுத்திப் பேசினார். பிறகு இக்கூட்டம் பல சித்தவைத்திய சங்கங்களின் தலைவரும், தமிழ்நாடு நாட்டுமருத்துவர்கள் மத்தியசங்கத் தலைவருமான உயர்திரு சாது H. தேவதாஸ் அவர்களும், சென்னை மாநில சட்டசபை சபாநாயகர் உயர்திரு யூ. கிருஷ்ணராவ் அவர்களும் காலமானதற்கு வருந்தி அவர்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கப்பட்டடது.

நாட்டுமுறை வைத்திய பதிவுக்காக (Registration) வாய்மொழி (oral Examination) சென்று வந்தவர்களுக்கு நீண்ட நாளாகிறபடியால் அவர் பதிவு செய்துகொண்டு சர்டிபிகேட் பெறுவதை உடனடியாக அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்ளுவதுமன்றி வாய்மொழி பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ள மற்றவர்களையும் அவ்வப்போது பரீட்சை செய்து அவர்களும் சீக்கிரமே சர்டிபிகேட் பெறவேண்டியதைச்செய்ய சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

தமிழ் நாடு அரசாங்கம் முன்பு வெளியிட்டபடியும் வைத்திய சங்கங்களின் கோரிக்கைப் படியும் இவ்வாண்டு ஜூலை மாதத்தில் நிறுவ இருந்த நாட்டு வைத்தியக் கல்லூரி இதுவரை நிறுவப் பெருததால் அதை உடனடியாக கீழ்ப்பாக்கத்திலுள்ள இணைப்பு வைத்தியக் கல்லூரியிலேயே நிறுவ வேண்டுமாய் அரசாங்கத்தாரை இக்கூட்டம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

சேலம் சஞ்சீவி மூலிகை போன்ற சில அபூர்வமருந்து மூலிகைகளும், அவைகள் கிடைக்கக்கூடிய கழுகுமலை போன்ற பல மலைகளால் சூழப்பட்டிருப்பதால் சேலத்தில் ஒரு சித்தவைத்தியக் கல்லூரி ஏற்படுத்தும்படி இக்கூட்டம் சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

சங்கத்தின் ஆண்டுவிழாவை சிறந்த முறையில் நடத்த செயலாளர் உள்பட திரு T. K. V. சுப்பிரமணியம், திரு மா. ராஜாப்பிள்ளை ஆகியோர் கொண்ட ஒரு குழுவை நியமித்ததுடன் விழாவை இம் மாதம் 31உயிலிருந்து செப்டம்பர் மாதம் 3ந் தேதிக்குள் நடத்தும் படியாக குழுவுக்கு பூர்ண அதிகாரமளிக்கப்பட்ட தீர்மானம் நிறைவேறியது.

பிறகு காரியதரிசி R. K. பழனியப்பா வந்தனோபசாரம் கூற கூட்டம் மாலை 6½ மணிக்கு இனிது முடிவுற்றது.

# சிகித்ஸையில் காலத்தின் முக்கியத்துவம்.

[வைத்ய S. V. ராதாகிருஷ்ணசாஸ்திரி, திருச்சி.]

(முன்னிதழ் தொடர்ச்சி.)

(2) **ப்ராக்பக்தம்:** இதுவும் அநந்நகாலம் தான். எனினும் மருந்து ஜீர்ணமானபின்னர் உண்ண வேண்டும் என்ற நிர்பந்த மில்லை. உண்பதற்கு உட்கார்ந்ததும் மருந்தைச் சாப்பிட்டு உடன் உண்ணவேண்டும். (ப்ராக்-முன்னர், பக்தம்-சாப்பாட்டிற்கு.) இதற்கேற்ற ரோகி - ரோக நிலைகள் முக்கியமாக அபான வாயு விலோமகதி அடைந்திருப்பது (எதிர்நோக்கி - மேல்நோக்கியிருப்பது - சாப்பிட்டவுடன் வயிற்று உப்புசம், பூர்ணதிருப்தி ஏற்படுமளவில் சாப்பிடமுடியாமை, வலி முதலியவை) ஆகும். இந்நிலையில் அஷ்டசூரணத்தை முதல் கவளத்துடன் நெய்சேர்த்துச் சாப்பிடுவது போன்ற உபசாரங்கள் இத்தகையதாகும். இதனால் ஜீர்ணத்திற்காக சுரக்கும் பித்த நீரை அதிகப்படுத்துவதோ, நேர்நிலையடையச் செய்வதோ அபானவாயுவை வழியடைப்பு நடையிலிருந்தும் திருப்பி அனுலோமமாக்குவதோ ஆகும். அநந்நகாலத்தைப் போல பலக்ஷயத்தை உண்டாக்காது. உணவால் மேல் மறைக்கப்படுவதால் மருந்தினால் ஏற்படும் எதிர்கலிவது (உத்க்லேசம்-எதுக்களிப்பு) போன்ற உபத்திரவங்கள் உண்டாவதில்லை. அநந்நகாலத்தில் ஔஷதஸேவை செய்ய முடியாதவர் இதை ஸேவிக்கலாம்.*

(3) **மத்யே பக்தம்:** (மத்யே - நடுவில், பக்தம்-உணவின் நடுவே) பாதிஉணவு சாப்பிட்டபின் மருந்தைச் சாப்பிட்டு பின்னர் உணவைச் சாப்பிடுவது. இது ஸமான வாயுவின் சீர்கேட்டை மாற்றும். மருந்து கோஷ்டத்தின் அக்ன்யாசயத்தில் மாத்திரம் ஜடராக்னியின் சீர்கேட்டை மாற்றுவதற்காகவே

---

* अपाने विगुणे पूर्वं (சரக சிகித்ஸை 30 அத்.)

शीघ्रं विपाकमुपयाति बलं न हिंस्यात्
अन्नावृतं न च मुहुर्वदनान्निरेति ।
प्राग्भक्तसेवितमथौषधमेतदेव
दद्याच्च वृद्धशिशुभीरुकृशांगनाभ्यः ॥ (ஸுச்ருத உத்தர 64)

பயன்படும் வகையில் அமைப்பது இதன் நோக்கம். குடல் நோய்கள், பித்த நோய்களில் இதற்கு உபயோகம்.[1]

(4) **அதோ பக்தம்**: (அத:-கீழே, பக்தம்-உணவின்-உண்டவுடன்) சாப்பாட்டின் கடைசி கவளத்துடன் அல்லது உணவு ஏற்றவுடன் சாப்பிடக்கூடியது. ஆமாசயத்திற்கு மேல் பாகத்திலுள்ள இடங்களில் உள்ள நோய்களில் - உதானவாயுவின் சீர்கேட்டில் இது குணம் தருகின்றது. உடலைப்பருக்க வைக்கும் மருந்துகளுக்கேற்ற காலம் இது. ஆமாசயத்திற்கு மேலுள்ள உறுப்புகளுக்குப் பலமளிக்க ஏற்ற வேளை. அதிலும் வியானவாயு (ஹிருதயம்) வை நோக்க மத்யான்ன உணவிற்குப் பின்னும் உதான வாயுவிற்குப் பலமளிக்க இரவு உணவிற்குப் பின்னரும் மருந்து ஸேவிப்பது மிகவும் உசிதம்.[2]

(5) **ஸபக்தம்**: (உணவுடன்) ஸ்திரீ, துர்பலன், சிசு, வயதானவன், மருந்தில் வெறுப்பு கொண்டவன்—ஆக நோயாளியிருந்தால் மருந்து தனியே ஏற்க விரும்பாதவனாகவோ, குடல் மருந்தைத் துளிக்கூட ஏற்கத் திறமையற்றிருந்தாலோ, எந்த ஔஷதமும் வாந்திபேதி போன்ற கேடு விளைவிப்பதானாலோ, நோய் ஸர்வாங்கங்களிலும் பற்றி இருந்தாலோ இந்த காலம் ஏற்றதாகின்றது. மண்டம், பேயா, யவாகூ போன்ற கஞ்சி வகைகளை மருந்துச் சரக்குகளுடன் சேர்த்துத் தயாரிப்பது-கடம் (खड) போன்ற மோர்கடி தயாரித்தோ குடிதண்ணீருக்குப் பதில் மருந்து கஷாயத்தையே பானீய கஷாயமாக்கியோ கொடுப்பது, இம்மாதிரி ஸ்நேஹபானங்களையும் கஞ்சிகளுடனோ அன்னத்துடனோ கொடுப்பது (விசாரணா முறை) இவையெல்லாம் ஸபக்தமுறையைச் சேர்ந்தது. இதை ஸம்போஜ்யம் என்றும் கூறுவர்.[3]

---

1. समाने मध्य भोजनम् । (சரக-சிகித்ஸை 30.)

मध्ये तु पीतमपहन्त्यविसारिभावात्
ये मध्यकायमभिभूय भवन्ति रोगाः । (ஸுச்ருத உத்தரம் 64)

2. व्यानेऽन्ते प्रातराशस्य उदाने भोजनोत्तरम् । (சரக சிகித்ஸை 30 அ)

पीतं यदन्नमुपभुज्य तदूर्ध्वकाले
हन्यादुगदान् बहुविधांश्च बलं ददाति । (ஸுச்ருத உத்தரம் 64 அத்)

3 संभोज्यं त्वौषधं भोज्यैः विचित्रैररुचौ हितम् ।
(சரக சிகித்ஸை 30 அத்)

6. **ஸாமுத்கம் :** ஸமுத்கம் என்பது மூடி - ஸம்புடம் எனப்படும். உணவின் ஆரம்பத்திலும் முடிவிலும் ஏற்கக்கூடிய காலம் இது. உணவிற்கு முன்னும் பின்னும் உட்கொண்ட மருந்து உணவிற்கு ஸம்புட மூடி போன்று இருபக்கங்களிலும் மூடிவிடுகின்றது. இதனால் உணவின் ஜீர்ணகாலத்தில் ஏற்படக் கூடிய நோய்கள், கம்பம், ஆக்ஷேபம், விக்கல் முதலிய நோய்கள், தோஷங்கள் மேல் நோக்கியோ கீழ்நோக்கியோ செல்வதால் ஏற்படும் நோய்களில் இந்த முறை பயன்படுகிறது. உணவு லகுவாகவும் அளவில் குறைவாகவும் உட்கொள்வது இதற்கு உதவும். லேகியம் சூரணம் போன்ற பாசன ஔஷதங்கள் இவ்விதம் ஏற்கத்தக்கவை.[1]

7. **அந்தராபக்தம் :**[2] முற்பகல் உணவிற்கும் பிற்பகல் உணவிற்கும் நடுவே மருந்து உட்கொள்வது அந்தராபக்தமாகும். முற்பகலில் உண்ட உணவு ஜீர்ணமான பிறகு மருந்து கொடுத்து அது ஜீர்ணமானதும் பிற்பகல் உணவு ஏற்றுக் கொள்ளவேண்டும். இவ்விதம் ஏற்கப்படும் மருந்து ஹ்ருதய பலகரமாகவும் மனோ பலகரமாகவும் தீபனமாகவும் இருக்கும். அக்னிதீபனம் சரியாக இருந்து வியானவாயு கோபத்தால் நோய் ஏற்பட்டிருப்பின் இம்மருந்து காலம் ஏற்றது.

---

पथ्यं सभक्तमबलाबलयोर्हि नित्यं
तद्द्वेषिणामपि तथा शिशुवृद्धयोश्च ।
हृद्यं मनोबलकरं त्वथ दीपनं च
पथ्यं सदा भवति चान्तरभक्तकं च ।
(ஸுச்ருத உத்தரஸ்தானம் 64)

1. सामुद्गं भक्तसंयुक्तम् ।
सामुद्गं हिक्किने देयं लघुनान्नेन संयुतम् ।
(சரக சிகித்ஸை 30 அத்)

सामुद्गं नाम यद्भक्तस्यादावन्ते च पीयते ।
दोषे द्विधा प्रविसृते तु समुद्गसंज्ञं
आद्यन्तयोर्यदशनस्य निषेव्यते तु (ஸுச்ருத உத்தர 64 அத்)

2. अन्तराभक्तं नाम यदन्तरापीयते पूर्वापरयोर्भक्तयोः ।
(ஸுச்ருத உத்தர 64 அத்)

8. **ஸக்ராஸம்:**[1] அன்னத்தின் ஒவ்வொரு பிடியுடனே அல்லது எல்லா பிடிகளுடனே சாப்பிடும் முறை இது. அக்னி பலம் குறைந்தவர்களுக்கு தீபன மருந்துகளும் வாஜீகர மருந்துகளும் பிராணவாயு சீர்கேட்டைச் செய்யும் மருந்துகளும் இந்த முறையில் கொடுக்கத்தக்கவை.

9. **க்ராஸாந்தரம்:**[2] இரு கவளங்களுக்கிடையே மருந்து ஏற்றுக்கொள்வது இதனால் குறிப்பிடப்படுகின்றது. பிராண வாயுவின் சீர்கேட்டிலும் ச்வாஸ நோய்களில் வமனதூமம் கொடுக்கவேண்டியிருக்கும்போதும் சிறந்த லேஹயோகங்களை யும் இந்த நேரத்தில் கொடுக்கலாம்.

10. **முஹுர்முஹு:**[3] (அடிக்கடி) அன்னத்துடன் சேர்த்தோ சேராமலோ நேரம் குறிப்பிடப்படாமல் அடிக்கடி உபயோகிப்பது இதனால் குறிப்பிடப்படுகின்றது. நீண்டநேரம் வேகமிருந்து தொந்தரவு செய்யும் நோய்கள், முக்கியமாக ச்வாஸம் காஸம் விக்கல் வாந்தி நாவரட்சி, விஷம்பரவுதல் போன்றவைகளில் இதன் உபயோகம் மிகச் சிறந்தது.

11. **ராத்ரிகாலம்:** இரவு படுக்குமுன் சாப்பிடுவது கழுத்துக்கு மேற்பட்டுள்ள இடங்களில் வரும் நோய்களில் இதன் உபயோகம் சிறந்தது.

சார்ங்கதரர் மருந்து உட்கொள்ளும் வேளைகளை ஐந்து விதமாகப் பிரித்திருக்கிறார். ஸூர்யோதய வேளை, பகல் உணவு வேளை, இரவு உணவு வேளை, அடிக்கடி, இரவு படுக்கு முன் என.

---

1. ग्रासं तु यत्पिण्डव्यामिश्रम् ।
ग्रासेषु चूर्णमबलाग्निषु दीपनीयं
वाजीकराण्यपि तु योजयितुं यतेत ।

2. ग्रासान्तरं तु यद्ग्रासान्तरेषु ।
ग्रासान्तरेषु वितरेद्वमनीयधूमान्
श्वासादिषु प्रथितदृष्टगुणांश्च लेहान् ॥ (ஸுச்ருத உத்தர 61 அத்)

3. सभक्तमभक्तं वा यदौषधं मुहुर्मुहुरुपयुज्यते ।
श्वासे मुहुर्मुहुरतिप्रसृते च कासे
हिक्कावमीषु च वदन्त्युपयोज्यमेतत् ।

**உணவிற்கான காலம் :** உணவு எப்போது ஏற்பது ? உணவு ஏற்பதற்குமுன் முன் உணவு ஜீரணமாகிவிட்டதன் அறிகுறிகள் யாவை ? உணவு ஏற்பதற்கான சரீரம் மனது இவைகளின் நிலை எது ? என்பவைகளைப்பற்றி ஆயுர்வேதக்குறிப்பு மிக்வும் கவனிக்கத் தக்கது. இதுபற்றிய ஸுச்ருதரின் ஸூத்திரம் மனதிற் கொள்ளத்தகுந்தது.

विसृष्टे विण्मूत्रे विशदकरणे देहे च सुलघौ
विशुद्धे चोद्गारे हृदि सुविमले वाते च सरति ।
तथाऽन्नश्रद्धायां क्लमपरिगते कुक्षौ च शिथिले
प्रदेयस्त्वाहारो भवति भिषजां कालः स तु मतः ।

மலமும் மூத்திரமும் வெளியாகி இருக்கவேண்டும். உணவோ அன்னஸாரமான ரஸமோ ஜீர்ணமாகாததால் ஏற்படும் மார்பகம் கனத்தல் போன்றவை இல்லாது ஹிருதயம் தெளிந்திருக்க வேண்டும். பதினொரு இந்திரியங்களும் தெளிவுற்று தன் செயல்களில் இயங்குபவையாக இருக்க வேண்டும். சரீரம் இலேசாக வேண்டும். ஏப்பம் சுத்தமானதாக புளித்த தித்தித்த சுவையற்று இருக்கவேண்டும். மற்ற ஸ்ரோதோ முகங்களும் திறந்து ஸாரங்களை ஏற்கக் கூடியவையாக இருக்க வேண்டும். வாயு அனுலோமநடையில் செல்ல வேண்டும். அக்னி தீபன பாசன சக்தி பெற்றிருக்க வேண்டும். இவ்விதமிருக்க பசி நன்ருக உண்டாகும். நாவிற்கு ருசி நன்கு தெரியும். உண்ணும் விருப்பம் ஏற்படும். வயிறு தளர்ந்திருக்கும். களைப்பு மிருக்காது. உற்சாகமாக இருக்கும். இதுதான் உணவேற்கத் தக்கக் காலமாகும்.

இந்தநேரம் வரும் முன்னமே சாப்பிட ஜீர்ணக் குறைவு. தலைவலி முதலியவை தினம் ஏற்பட்டு உபத்திரவிக்கும். வேளை கழித்துப் பிறகு சாப்பிட ஜீர்ணமாவதில் தாமதம், விதக்தா ஜீரணம் வெறுப்பு முதலியவை ஏற்படும்.

ஆக நோயாளி ஔஷதம் ஏற்கத்தகுந்த நேரம், ஆரோக்கியமுள்ளவன் உணவு ஏற்கும் காலம், மற்றும் வர்ஷம், ருது, மாதம், நாள், பகல், இரவு முதலிய இயற்கை நேரப்பகுதிகள் இவையனைத்தும் சிகித்ஸையில் முக்கியமாகக் கவனிக்கத் தகுந்தவை.

# பொறுக்குமணிகள் :

रूपलावण्यबलवज्रसंहननत्वानि कायसंपत् ।

அழகு, மென்மை, பலம், திடம் இந்த நான்கும் உடலிற்கு மேன்மையளிக்கக் கூடியவை. (யோகதர்சனம்)

विषमाभिनिवेशो यो नित्यानित्ये हिताहिते ।

ज्ञेयः स बुद्धिविभ्रंशः समं बुद्धिर्हि पश्यति ॥

நித்யம் அநித்யம் ஹிதம் அஹிதம் என்றவாறு பொருள்களின் உண்மை நிலையை உள்ளபடி அறிய உதவுவது புத்தியாகும். இந்த புத்தியின் நழுவதல் அல்லது தடுமாற்றம் புத்திப்ரம்சமாகும். இது பொருள்களின் உண்மைநிலைக்கு வேறுபாடாக அறியச் செய்யும். (சரகஸம்ஹிதை)

विषयप्रवणं सत्त्वं धृतिभ्रंशान्न शक्यते ।

नियन्तुमहितादर्थात् धृतिर्हि नियमात्मिका ।

இந்திரியங்களாலே அனுபவிக்கப்பெற வேண்டியவைகளான பொருள்களில் கட்டுப்பாடற்று ஈடுபடவிருக்கும் மனத்தை தனக்கு அஹிதமான பொருள்களிலிருந்தும் திருப்பிக்கட்டுப்படுத்தி ஹிதமான பொருள்களில் ஈடுபடச்செய்வது திருதி (தைர்யம்) ஆகும். இது நழுவ ஹிதம் அஹிதம் என்ற பாகுபாடின்றி கட்டின்றி மனம் ஈடுபடத்துவங்கும். இது திருதி ப்ரம்சமாகும். (சரகஸம்ஹிதை)

तत्त्वज्ञाने स्मृतिर्यस्य रजोमोहावृतात्मनः ।

भ्रश्यते स स्मृतिभ्रंशः स्मर्तव्यं हि स्मृतौ स्थितम् ॥

ஹிதம் என்றும் அஹிதம் என்றும் அனுபவித்தும் கேட்டும் பார்த்தும் உணர்ந்ததை உபயோகவேளையில் நினைவுபடுத்திக் கொள்வது ஸ்மிருதி. இது ஸதவகுணத்தின் செயல். ரஜஸ்ஸூம் தமஸ்ஸூம் மூடும்போது நினைவிழக்க நேரிட்டு உண்மையறிவு மறையும். இது ஸ்மிருதி ப்ரம்சமாகும். (சரகஸம்ஹிதை)

धीधृतिस्मृतिविभ्रष्टः कर्म यत्कुरुतेऽशुभम् ।

प्रज्ञापराधं तं विद्यात् सर्वदोषप्रकोपणम् ॥

புத்தி, தைர்யம், நினைவு என்ற மூன்றும் சேர்ந்து ஒழுங்காக இயங்குவது பிரக்ஞையாகும். பிரக்ஞையுடன் செய்யும் செயல் ஆரோக்யஹேதுவாகும். பிரக்ஞையிழந்து (புத்தியற்று கட்டுப்பாடற்று செய்வதென்னவென்ற நினைவின்றி)ச் செய்யும் செயல் வாதம் பித்தம் கபம் என்ற மூன்று தோஷங்களையும் கெடுத்து செய்யும் செயலை அசுபமாக்கி நோயை ஏற்படுத்துகின்றது.

(சரகஸம்ஹிதை)

## ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பு கட்டுப்பாடு

புதுடில்லி ஆக 29

ஆயுர்வேத, யுனானி மருந்துகள் தயாரிப்பைக் கட்டுப்படுத்த சட்டமியற்றுவது பற்றி இன்னும் சர்க்கார் ஆலோசித்து வருவதாக சுகாதார மந்திரி ஸ்ரீ கர்மார்கர் இன்று லோக் சபையில் கூறினார். போலி மருந்துகள் உற்பத்தியைத் தடுக்கவும், சுத்தமான தரமுள்ள மருந்துகள் மக்களுக்குக் கிடைக்கச்செய்வதும் தான் சட்டமியற்றுவதன் நோக்கம் என்று மந்திரி தெளிவுபடுத்தினார். இத்துறையில் முதல் நடவடிக்கையாக மருந்துக் கலவையிலடங்கிய பொருள்களின் பட்டியலை பாட்டில்மீது ஒட்டச் செய்யலாமென்றும், இதன் பயனாக மருந்தைப் பரிசோதித்து பட்டியலிலடங்கிய விஷயம் உண்மையா என்று கண்டறிய இயலுமென்றும் அவர் உரைத்தார்.

---


# வைத்யசந்த்ரிகை வெளியீடுகள்

## ★ வந்துவிட்டன! ★

( அங்கத்தினர்களுக்கு மாத்திரம் )

### 1. யோகரத்நாகரம்

*( தமிழ் மொழிபெயர்ப்பு )*

**ஜ்வரம், அதிஸாரம், கிரஹணீ, அர்சஸ், அஜீர்ணரோகங்கள்**

*இரு பகுதிகள் அடங்கிய முதல் பாகம் விலை 2—00*

*ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் அனுப்ப 0—75*

### 2. சாரீரச் சொற்கள் அகராதி

*விலை ரூ. 1—00*

*ரிஜிஸ்டர்ட் புக்போஸ்டில் அனுப்ப 0—65*

சாதாரண புக்போஸ்டில் அனுப்புவதானால் 50 ந. பை. குறைத்து அனுப்பலாம்.

புத்தகத்தின் விலையையும் தபால் செலவையும் முன்பணமாக அனுப்பி புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ கொஞ்ச காபிகளே தயாராகியுள்ளன. ★

# ஆரிய பொன்மொழிகள்

நீடித்த ஆயுளை விரும்பும் புத்திமானான மனிதன் வைத்யர்களை நிந்திப்பதோ, அவர்களுக்கு அஹிதமான கார்யங்களைச் செய்வதோ கூடாது.

*　*　*

வைத்யனிடம் சிகித்ஸை செய்துகொண்டு பிறகு வைத்யனுக்கு ஒருவித உபகாரமும் செய்யாத மனிதனுக்கு ஏற்படும் பாபத்துக்குப் பரிஹாரமாக ஒருவித பிராயச்சித்தமும் இடையாது.

*　*　*

வைத்யனும் தம்மையடுத்த ரோகிகளை தன் புத்திரர்களைப் போல் நேசித்து அவர்கள் படும் துன்பங்களிலிருந்து உத்தமமான தர்மத்தைக் கருதி காப்பாற்ற வேண்டும்.

*　*　*　*　*

அழிவில்லாத பதவியை விரும்புபவர்களும் தர்மத்தையே அனுஷ்டானத்திலுடையவர்களுமான மஹரிஷிகளால் தர்மத்தின் பொருட்டும், அர்த்தத்தின் பொருட்டும், காமத்தின் பொருட்டும் ஆயுர்வேதம் வெளியிடப்பட்டது. இதில் அர்த்தகாமங்களை விரும்பாமல் தர்மம் ஒன்றையே எண்ணி எந்த வைத்யன் சிகித்ஸையைச் செய்கிறானோ; அவன் தர்மார்த்த காமமோக்ஷங்களனைத்தையும் தானாகவே அடைகிறான். (—சரகர்.)

---

ஸ்ரீரங்கம் ஸ்ரீலக்ஷ்மீ ப்ரஸந்ந வெங்கடேச ஆயுர்வேத தர்ம வைத்யசாலை, ஸ்ரீரங்கம்.

ஆகஸ்டு, மாதத்தில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.

| | | |
|---|---|---|
| ஆண்கள் | 648 | |
| பெண்கள் | 570 | 1601 |
| சிறுவர் | 383 | |

நிர்வாஹஸ்தர்,
M. V. கிருஷ்ணமூர்த்தி ராவ்,
B. A., B. L., அட்வகேட்,
ராயபாளையம் பண்ணை

**8. ஆணி மர்மம் :—** முழங்காலிலிருந்து மூன்று அங்குலம் மேல் இருபுறமும் உள்ள ஸ்நாயு மர்மமாகும். வைகல்யகரமாகும். அரை அங்குலப்பருமனுள்ளது. இங்கு அடிபட வீங்கும். ஸ்தம்பித்து அசைக்க முடியாதிருக்கும் [1]

இதன் அமைப்பிலுள்ளவையாவன :—

நான்கு தலையுள்ள துடைத்தசை [2]

ஊருதண்டிகா எனும் தசை [3]

துடையை நீட்டும் மூன்று தசைகள் [4]

முழங்கால் பூட்டிற்கு வரும் ரத்தக்குழாய்கள்

துடை நரம்பு. [5]

**9. ஊர்விமர்மம் :** துடையின் நடுவிலுள்ள ஸிராமர்மம். வைகல்யகரமாகும். ஒரு அங்குலப்பருமனுள்ளது. இங்கு அடிபட ரத்தம் வெளியேறி துடை கால் சூம்பிவிடும். [6]

இதன் அமைப்பில் உளளவை துடையின் ரத்தக்குழாய்களும் நரம்புகளுமாகும். [7]

**10. லோஹிதாக்ஷ மர்மம் :** ஊர்விக்குமேல் அரை இடுக்குக்குக் கீழ் துடையின் ஆரம்பத்தில் உள்ள ஸிராமர்மமாகும். வைகல்யகரப்பிரிவைச் சேர்ந்தது. அரை அங்குலப்பருமனுள்ளது. இதில் அடிபட ரத்த க்ஷயம் ஏற்பட்டு அந்தப் பக்கம் வீழ்தல் (பக்ஷவதம்), கால்கள் இளைத்தல் இவை ஏற்படும். [8]

---

1. जानुन ऊर्ध्वमुभयतः त्र्यंगुलमाणीनाम मर्म । तत्र शोफाभिवृद्धिः स्तब्धता च ।
2. Quadriceps Femoris.
3. Rectus Femoris.
4. Vastus (intermedius, lateral, medius)
5. Femoral Nerve.
6. ऊरूमध्ये ऊर्वी नाम । तत्र शोणितक्षयात् सक्थिशोषः ।
7. Femoral Artery, Vein & Nerve (Adductor canal)
8. ऊर्व्या ऊर्ध्वमधो वंक्षणस्योरुमूले लोहिताक्षं नाम । तत्र लोहितक्षयेण पक्षाघातः सक्थिशोषो वा ।

இதன் அமைப்பு துடைத்திரிகோண[1] அமைப்பில் அடங்கியுள்ளது. ஊர்வியிலுள்ளதுபோல் துடையின் ரத்தக்குழாய்களும் நரம்புகளும் இதில் அமைந்துள்ளன.

11. விடபமர்மம்: அரை இடுக்கில் அண்டகோசத்திற்கும் அரைஇடுக்கிற்கும் நடுவே உள்ள ஸ்நாயுமர்மம் வைகல்யகரமாகும். ஒரு அங்குல பரிமாணமுள்ளது. இதில் அடிபட சுக்கில க்ஷயம் அல்லது நபும்ஸகத்தன்மை ஏற்படும்.[2]

## நடு உடல் மர்மங்கள்

### உதர மர்மங்கள்

1. குதமர்மம் :- மலத்தையும் வாயுவையும் வெளியேற்றும் பெருங் குடலின் கடைசிப்பகுதியிலுள்ள மாம்ஸமர்மம், ஸத்யஃபிராணஹரப்பிரிவைச் சார்ந்தது. இதன் நீளம் நான்கு அங்குலங்கள். இங்கு அடிபட உடன் மரணபரியந்தமான கெடுதல் ஏற்படும்.[3]

இதன் அமைப்பில் கீழ்க்கண்ட அங்கங்கள் சேர்கின்றன.

குதஸங்கோசனி எனும் குதத்தைச்சுருக்கும் தசைகள்.[4]

குதத்தைத் தாங்கும் தசை[5]

குதவெளியிலுள்ள நரம்பு மண்டலம்[6]

குதத்திலுள்ள ரத்தக்குழாய்கள்[7]

இங்கு அடிபட முதலில் திமிர் ஏற்பட்டு குதவாய் மூடி உபத்ரவங்கள் ஏற்படும்

---

1. Femoral Triangle.

2. वंक्षणवृषणयोरन्तरे विटपं नाम, तत्र षाण्ढ्यं अल्पशुक्रता वा भवति।

3. तत्र वातवर्चो निरसनं स्थूलान्त्रप्रतिबद्धं गुदं नाम मर्म। तत्र सद्यो मरणम्।

4. External & Internal Sphincter Ani Muscles.
5. Levator Ani
6. Inferior Hemorrhoidal Nerve Plexus.
7. Inferior Hemorrhoidal Artery & Vein.

2. **பஸ்திமர்மம்:**

2. இடுப்பின் முன்புறத்தில் நடுவே அமைப்பில் சிறிதளவிலே தசையும் ரக்தமும் கொண்டதும் கடிகபாலாஸ்தியின் நடுப்பொருந்துவாய்க்கு நேர் பின்னர் உள்ள பஸ்தி ஸ்நாயு மர்மமாகும். இதுவும் ஸத்யஃபிராணஹரமாகும். நான்கு அங்குல நீளமுள்ளது.[1]

பஸ்தியின் அமைப்பைக் கவனிக்கையில் அதன் மேற்புறத்தில் உதரகுஹையைச் சுற்றி மூடியுள்ள உதராவரண கலை[2] வந்து சேர்கின்றது. இங்கு பிளவு ஏற்பட்டால் பஸ்தியில் சேரும் மூத்திரம் உதரகுஹைக்குள் சுரந்து அங்கு, திமிர்வலி முதலியவைகளை ஏற்படுத்தி விஷவேகம் போல் கடுமையாகத் தொடர்ந்து மரணமேற்படுகின்றது. பஸ்தியின் இருபுறங்களிலும் கீழும் பிளப்பு ஏற்பட்டால் ச்ரோணி குஹையில்[3] மூத்திரம் சுரந்து அங்கும் அதேபோல உபத்திரவங்கள் ஏற்படுகின்றன. எதிர்பாராமல் அல்லது அடி முதலியவைகள் ஏற்படுவதால் பஸ்தி பிளந்தால்தான் இவ்வுபத்திரவங்கள் ஏற்படுகின்றன. ஆனால் பஸ்தியை ஒரு சல்யசிகித்ஸகன் அச்மரிக்காகப் பிளந்து சிகித்ஸை செய்தால் அங்கு உடன் மூத்திரம் வெளியிலே பரவாதிருக்கத் தகுந்த முன்னேற்பாடுகள் இருக்குமாதலால் அவ்வப்போது இவ்வுபத்திரவங்கள் ஏற்படுவதில்லை. அங்கும் இருபுறங்களிலும் பிளப்புக்கு அவசியமேற்பட்டால் பிழைப்பது சிரமமே.

3. **நாபி மர்மம்:—** பக்வாசயத்திற்கும் ஆமாசயத்திற்கும் நடுவே நாபி எனும் மர்மம். தாயின் கர்ப்பவாஸ காலத்தில் இங்கு சிசுவிற்கும் தாய்க்கும் உள்ள ரத்தக்குழாய் தொடர்பு இருந்தது. அந்த தாயின் சிரைகள் பிரிக்கப்பட்டு பின்னர் தொப்புள் கொடி காய்ந்து போன இடம். கீழே பஸ்தியும் மேலே இருபுறங்களில் யக்ருத்தும் ப்லீஹமும் பின்னர் சிறுகுடல் பெருகுடல் பகுதிகளும் பின்னர் நரம்பு மண்டலத்தைத் தாங்கும் ஸுஷும்நா காண்டமுமாக இந்த இடம் உடலில் ஒரு முக்கிய கேந்திரமாகின்றது. இதிலுள்ள முக்ய ரத்தக்குழாய்

---

1. अल्पमांसशोणितोऽभ्यन्तरतः कट्यां मूत्राशयो बस्तिर्नाम। तत्रापि सद्योमरणम् अश्मरीव्रणादृते। तत्राप्युभयतो भिन्ने न जीवति। एकतो मूत्रस्रावी व्रणो भवति। स तु यत्नेन रोहति।

2. Peritoneum. 3. Pelvic Cavity.

ஆமாசயத்தைச் சுற்றிச்செல்லும் ரத்தக்குழாய்களின் பகுதிகள்.[1] இது ஸிராமர்மம். ஸத்யஃபிராணஹரப் பிரிவினைச் சேர்ந்தது நான்கு அங்குலப் பருமனுள்ளது. இங்கு அடிபட மூல அவயவங்களில் ஏற்படும் சேதம் காரணமாக ரத்தப்பெருக்கு மிகுந்து திமிர் வலி முதலியவைகளால் மரணபர்யந்தமான உபத்திரவங்கள் ஏற்படுகின்றன.[2]

இந்த மூன்றும் உதரமர்மங்களாகும்.

## உரோமர்மங்கள்

1. **ஹிருதயமர்மம்**:— இரு ஸ்தநங்களின் நடுவே சிறிது இடதுபுறத்தில் தள்ளி நிற்கும் ஹிருதயம் ஸிராமர்மம். ஸத்யஃபிராணஹரப்பிரிவைச் சேர்ந்தது. நான்கு அங்குல பருமனுள்ளது. ரக்தஸஞ்சாரத்தின் முக்கியஸ்தானமாக இருப்பதுடன் மனதின் ஸத்வ ரஜஸ் தமஸ் குணங்களுக்கும் முக்யஸ்தானமாக உள்ளது. இங்கு அடிபட உடன் மரணம்.[3] இந்த இடம் ஆமாசய த்வாரத்திற்கு வெகு ஸமீபமாக உள்ளது.

2. **ஸ்தநமூல மர்மம்**:— இருஸ்தநங்களுக்கும் இரண்டங்குலம் கீழே உள்ள இரு மர்மங்கள் ஸிராமர்மமாகும். காலாந்தரப்ராணஹரப் பிரிவைச் சேர்ந்தவை. இங்கு அடிபட புப்புஸங்களில் கபம் நிறைந்து காஸச்வாஸங்களால் பிராண பயம் ஏற்படும்.[4] இதனால் குறிப்பிடப்படும் இடம் புப்புஸங்களின் ஆதாரஸ்தலமாகும்.[5] இங்கு அடிபட கடுமையான உரக்ஷதம், ச்வஸனக ஜ்வரம் முதலியவை ஏற்படும்.

3. **ஸ்தநரோஹித மர்மம்**:— மார்பின் இருபுறமும் முலைக் காம்பிற்கு இரண்டங்குலம் மேலே உள்ள மாம்ஸ மர்மம்.

---

1. Coeliac Axis - Left epigastic Artery & Vein.

2. पक्वामाशययोर्मध्ये सिराप्रभवा नाभिर्नाम। तत्रापि सद्योमरणम्।

3. स्तनयोर्मध्यमधिष्ठायोरस्थामाशयद्वारं सत्वरजस्तमसामधिष्ठानं हृदयं नाम। तत्रापि सद्य एव मरणम्।

4 स्तनयोरधस्ताद्व्यंगुलमुभयतः स्तनमूले नाम मर्मणी। तत्र कफ·पूर्णकोष्ठतया कासश्वासाभ्यां म्रियते।

5. Base of the Lungs.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிசவாயு முதலிய எல்லாவிதமான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப்பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துக்கள்—தசை நார்களில் வலி, வீக்கம், கை, கால் வலி முதலிய எல்லா விதமான நோவுகளையும் நிச்சயமாக குணப்படுத்தும், மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல் கண்—காது கோளாறுகள், ஒருத்தலை வலி, முதலிய கோளாறுகளையும் குணப்படுத்தும்.

ரத்த அழுத்தம் (பிளட் பிரஷர்) என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கு வாயுவை நீக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும், விருத்தாப்பியத்தினால் ஏற்படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்தி குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

*விலை: 1 அவுன்ஸ் ரூ. 5-8-0 1/2 அவுன்ஸ் ரூ. 2-14-0.*

ஆரிய வைத்தியர் கெ. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

*சைனா பஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.*

*(1936-ல் நிறுவப்பட்டது.)*

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

**K. L. TALWAR & BROS.**

**MUSK MERCHANTS.**

**P. B. No. 17, LUDHIANA.**

விலைப் பட்டியல் கேட்லாக்குகளுக்கு எழுதினால்
இனமாக அனுப்பப் பெறும்.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**BHANOT BROTHERS.**

(REGD)

Wholesale Musk Saffron and Indian Drugs
Merchants.

LUDHIANA, PUNJAB

ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்.